| மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம் | | |
|---|---|---|
| இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018 | | |
| தரம் :- 10 | **பரத நாட்டியம்** | நேரம்:- 3 மணித்தியாலங்கள் |

## பகுதி - I

❖ **பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**

01) அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட அவதாரம் எடுத்து அருள் புரிபவர்
(1) சிவன் (2) கணபதி (3) முருகன் (4) விஷ்ணு

02) பரத நாட்டியத்திற்குரிய பக்க வாத்தியங்களில் தாள வாத்தியமாக அமைவது
(1) மிருதங்கம் (2) வயலின் (3) வீணை (4) புல்லாங்குழல்

03) அழகிய பூஞ்சோலையில் பூக்கள் மலர்ந்தன. இதனை அபிநயிக்கும் போது பூக்கள் என்பதைக் காட்டப் பயன்படும் முத்திரை
(1) பதாகம் (2) மயூரம் (3) அலபத்மம் (4) திரிசூலம்

04) மகுட அடவுகளில் ஒன்று
(1) தத்தெய்தாஹா (2) கிடதக தரிகிடதொம்
(3) தாதெய்தெய்த (4) தட்டடவு

05) நாட்டியக் கலைஞருக்கு இருக்க வேண்டிய பத்துக் குணங்கள்
(1) பாத்திர லக்ஷணம் (2) பாத்திரப் பிராணன்கள்
(3) குருலக்ஷணம் (4) சிஷ்யலக்ஷணம்

06) லகு, துருதம், அனுத்துருதம் ஆகிய மூன்று அங்கங்களையும் கொண்ட தாவரம்
(1) ஜம்பை (2) துருதம் (3) மட்டியம் (4) திரிபுடை

07) உலக வழக்கத்திற்கு அப்பாற்பட்டுக் கலை வடிவத்திற்கு முக்கியத்துவம் தருவது
(1) நிருத்தம் (2) நிருத்தியம் (3) நாட்டியதர்மி (4) லோகதர்மி

08) தெய் தெய் த தா அடவு அமைந்துள்ள தாளம்
(1) சதுஸ்ரஜாதி திரிபுடை (2) சதுஸ்ரஜாதி ரூபகம்
(3) சதுஸ்ரஜாதி ஜம்பை (4) சதுஸ்ரஜாதி மட்டியம்

09) தவில் வாசிக்கப் பயன்படும் கழி செய்யப்படும் மரங்களில் ஒன்று
(1) வேம்பு (2) பூவரசு (3) பலா (4) மா

10) மகாமேரு என்றும், தட்சிண மேரு என்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் ஆலயம்
(1) சிதம்பரம் (2) காஞ்சி கைலாசநாதர் கோயில்
(3) தஞ்சைப் பெருவுடையார் கோயில் (4) மயிலாப்பூர் சிவன் கோயில்

11) அரிவிவெட்டு நடனம் எவ்வகைக் கிராமிய நடனம் ஆகும்.
(1) மகிழ்ச்சிக்காக ஆடும் கிராமிய நடனம்
(2) வேண்டுதலுக்காக ஆடும் கிராமிய நடனம்
(3) தொழில்சார் கிராமிய நடனம்
(4) வருமானத்திற்காக ஆடும் கிராமிய நடனம்

12) ஒரு தாளத்தினை ஒரு முறை முழுமையாகப் போடுதல்
   (1) ஆவர்த்தனம் (2) அங்கம் (3) லகு (4) அனுத்துருதம்

13) அலாரிப்பு அமைந்துள்ள தாளம்
   (1) ஆதி (2) திஸ்ர ஏகம் (3) சதுஸ்ர ரூபகம் (4) திஸ்ர ஜம்பை

14) சங்கு ஊதுதலைக் குறிக்கப் பயன்படும் முத்திரை
   (1) அஞ்சலி (2) கபோதம் (3) கர்க்கடகம் (4) ஸ்வஸ்திகம்

15) தித்தெய்ந்த தா தெய் அடவினை அபிநயிக்கும் போது அதிகளவில் பயன்படும் காலின் செய்கை
   (1) பாய்ச்சல் (2) சுற்றி வருதல் (3) நடத்தல் (4) துள்ளுதல்

16) ஜதிஸ்வரத்தை அழகு படுத்துவதற்காகக் கோர்வைகளிடையே அபிநயிக்கப்படுவது
   (1) மகுட அடவு (2) பாய்ச்சல் அடவு (3) பரவல் அடவு (4) மெய்யடவு

17) கூத்துமரபில் கூத்து ஒன்றிற்குப் பாத்திரங்களைத் தெரிவு செய்தல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   (1) சதங்கை அணிதல் (2) அரங்கேற்றம்
   (3) சட்டம் கொடுத்தல் (4) தினக்கூத்து

18) அடிப்படையான ஏழு தாளங்கள் 35 தாளங்களாவதற்குக் காரணமாக அமைவது
   (1) கதி (2) ஜாதி (3) யதி (4) சொற்கட்டு

19) தேவர்களும், அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்து அமுதம் எடுத்த போது, மத்தாகப் பயன்படுத்தப்பட்டது
   (1) மந்தரமலை (2) பாற்கடல் (3) வாசுகிப் பாம்பு (4) மஹாவிஷ்ணு

20) // என்னும் குறியீடு குறிப்பது
   (1) அங்க முடிவு (2) துருதம்
   (3) ஆவர்த்தன முடிவு (4) அனுத்துருதம்

21) காத்தவராயன் கூத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் தோல் வாத்தியம்
   (1) மிருதங்கம் (2) தவில் (3) தபேலா (4) உடுக்கு

22) பாத்திரப் பகிப் பிராணன்களில் நட்டுவன் எனக் குறிப்பிடப்படுபவர்
   (1) நடனக் கலைஞர் (2) நடன ஆசான்
   (3) வாத்தியக் கலைஞர் (4) அரங்கக் கலைஞர்

23) “தாத்தா” என அன்புடன் அழைக்கப்பட்ட நாட்டியக் கலைஞர்
   (1) தஞ்சை வடிவேலு
   (2) ஆடையாறு. கே. லக்ஷ்மணன்
   (3) வழுவூர் இராமையாபிள்ளை
   (4) பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

24) ஸ்வரமாலை, ஸ்வரபல்லவி என அழைக்கப்படும் நடன உருப்படி
   (1) அலாரிப்பு (2) தில்லானா (3) ஜதிஸ்வரம் (4) வர்ணம்

25) வடபாங்கு, தென்பாங்குக் கூத்துக்கள் பயில் நிலையில் உள்ள பிரதேசம்
   (1) யாழ்ப்பாணம் (2) மன்னார் (3) முல்லைத்தீவு (4) மலையகம்

26) அபிநயங்களை வெளிப்படுத்தாது அடவுகளை மட்டும் பிரயோகித்து ஆடப்படுவது
(1) நிருத்தம் (2) நிருத்தியம் (3) நாட்டியம் (4) நாடகம்

27) வாச்சிக அபிநயம் என்பது
(1) அங்கங்களினால் வெளிப்படுத்தப்படுவது ஆகும்.
(2) ஆடை ஆபரணங்களால் வெளிப்படுத்தப்படுவது ஆகும்.
(3) உணர்வுகளால் வெளிப்படுத்தப்படுவது ஆகும்.
(4) வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படுவது ஆகும்.

28) சிவபெருமான் ஆடிய தாண்டவங்களில் ஐந்தொழில்களையும் ஒரே உருவில் வெளிப்படுத்துவது
(1) ஆனந்தத் தாண்டவம் (2) கௌரி தாண்டவம்
(3) திரிபுர தாண்டவம் (4) காளிகா தாணடவம்

29) கைகளில் செம்பு முதலான பொருட்களை ஏந்தி ஆடும் நடனம்
(1) கும்மி (2) ஏந்தல் நடனம் (3) காவடி (4) குறத்தி நடனம்

30) தக கிடதக தரிகிடதொம் - இதற்குரிய அடவுச் சொற்கட்டு
(1) தெய் தித்தித் தெய் (2) தெய் தெய் தித்தித் தெய்
(3) தெய்தெய்தெய் தித்தித் தெய் (4) தித்தித் தெய்

31) கரையோரப் பிரதேசங்களுக்குரியதாகக் கருதப்படும் கிராமிய நடனம்
(1) அரிவிவெட்டு நடனம் (2) கோலாட்டம்
(3) கரகம் (4) மீனவ நடனம்

32) உடம்பைக் குறிக்கப் பயன்படும் முத்திரை
(1) பிரலம்பம் (2) சதுரம் (3) பதாகம் (4) அராளம்

33) நாட்டியக் கலைக்கான அபிநயம் எடுக்கப்பட்ட வேதம்
(1) அதர்வணம் (2) சாமம் (3) யசுர் (4) இருக்கு

34) நாட்டியப் பயிற்சியின் போது பயன்படுத்தப்படும் உபகரணம்
(1) மிருதங்கம் (2) தட்டுக்கழி (3) தாளம் (4) சல்லாரி

35) தகிட தகதிமி என்ற சொற்கட்டுக்குரிய ஜாதி
(1) திஸ்ரம் (2) சதுஸ்ரம் (3) கண்டம் (4) மிஸ்ரம்

36) “ஆலிங்கனே” என்பது
(1) வணங்குதல் (2) அணைத்தல் (3) பாடுதல் (4) ஆடுதல்

37) மூங்கில் மரத்தினால் செய்யப்படும் இசைக்கருவி
(1) நாதஸ்வரம் (2) யாழ் (3) வயலின் (4) புல்லாங்குழல்

38) உயரமான இடத்திலுள்ள பொருட்களைப் பார்க்கப் பயன்படும் தலையசைவு
(1) உத்வாகிதம் (2) கம்பிதம் (3) துதம் (4) பரிவாஹிதம்

39) ஜாதி பேதங்களால் மாற்றமடையும் தாள அங்கம்
(1) புலுதம் (2) அனுத்துருதம் (3) லகு (4) துருதம்

40) திரிபதாக முத்திரையை மட்டும் பயன்படுத்தி அபிநயிக்கப்படும் அடவு
(1) குதித்து மெட்டடவு (2) பரவல் அடவு
(3) வீச்சடவு (4) பாய்ச்சல் அடவு (40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம்** வினாவிற்கும் ஏனைய வினாக்களில் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

01) சுருக்கமான விடை தருக.

(i) இறைவன், குரு, சபையோருக்கு வணக்கம் செலுத்துவதாக அமைந்த நடன உருப்படி எது?

(ii) சுருதிக்காகப் பயன்படுத்தப்படும் நரம்பு வாத்தியம் எது?

(iii) பாத்திரப் பிராணன்களில் குறிப்பிடப்படும் "மேதா" என்றால் என்ன?

(iv) U என்ற குறியீட்டிற்குரிய தாள அங்கம் எது?

(v) கிண்கிணியின் தெய்வம் எது?

(vi) கஞ்சக் கருவிக்கு ஒரு உதாரணம் தருக.

(vii) மராட்டிய மன்னரின் ஆட்சியில் தஞ்சைப் பெருங்கோயில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

(viii) கூத்துக்கள் ஆடப்படும் அரங்கு எவ்வாறு அழைக்கப்பட்டது?

(ix) மகுட அடவுகளைத் தருக.

(x) உடுக்கின் வகைகளைத் தருக. (1 + 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 2 + 2 = 12 புள்ளிகள்)

02) பின்வரும் முத்திரைகளின் விநியோகங்களையும் கருத்தையும் எழுதுக.

(i) சிகரம்

(ii) கபோதம்

(iii) கர்த்தரிமுகம்

(iv) கர்க்கடகம் (12 புள்ளிகள்)

03) "கிராமப் புறங்களில் மக்கள் வாழ்க்கையோடு கிராமிய நடனங்கள் இணைந்துள்ளன"

(i) கிராமிய நடனங்களின் வகைகளைத் தருக. (2 புள்ளிகள்)

(ii) அவற்றிற்கு ஒவ்வொரு உதாரணம் தருக. (2 புள்ளிகள்)

(iii) ஏந்தல் நடனம், வாள் நடனம் ஆகியவற்றை விளக்குக. (8 புள்ளிகள்)

04) "மகுட அடவுகள் கோர்வைகளின் இறுதியில் இடம்பெறுகின்றன"

(i) மகுட அடவுகள் அமைந்துள்ள தாளம் யாது? (2 புள்ளிகள்)

(ii) மகுட அடவுகளில் ஒன்றிணைத் தாளாங்கக் குறியீட்டில் எழுதுக. (10 புள்ளிகள்)

05) பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு, கலைப் பணிகள் ஆகியவற்றைத் தருக. (12 புள்ளிகள்)

06) பின்வருவனவற்றை விளக்குக.

(i) பாத்திர பகிரப்பிராணன்கள்

(ii) திரியாங்கங்கள்

(iii) நாட்டியதர்மி

(iv) அடவு (12 புள்ளிகள்)

07) (i) நாட்டுக்கூத்தின் வகைகளைத் தருக. (4 புள்ளிகள்)

(iii) தென்மோடி, வடமோடிக் கூத்துக்களின் ஒற்றுமை, வேற்றுமைகளைத் தருக. (8 புள்ளிகள்)